91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன.
★ பிரிவு I ★
07.30 - Zoology
08.30 - Botany
07.30 - Pure Maths
08.30 - Applied Maths
09.30 - Chemistry
10.30 - Physics
எமது வழமையான ஆசிரியர் குழு
NEW MASTER INSTITUTE
B.M.C.Lane, Jaffna. 241, Navalar Road Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

91 A/L
WEEKEND CLASSES
(Sat & Sun)
நடைபெறுகின்றன
★ பிரிவு II ★
08.30 - Zoology
09.30 - Botany
10.30 - Chemistry
11.30 - Physics
7.30 - Pure Maths
8.30 - Applied Maths
புதிய பகுதிகள் ஆரம்பமாகியுள்ளன.
NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, Jaffna. 241, Navalar Road Jaffna.

சுடர் 5: பிரமோதூத ஆடி ஆனி மீ 20 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ்தா பிறை 10 (04-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 1 31

# புலிகளுடன் பேச பிரேமா முயற்சி!

## அரச தரப்பு பிரதிநிதிகள் குழு இன்று பலாலி வருவதாக ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு பேசுவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பான நிலைமைகளை ஆராய்வதற்காக ஜனாதிபதி பிரேமதாஸாவின் பிரதிநிதிகள் குழு ஒன்று பலாலிக்கு இன்று வருவதாக ஏற்பாடாகியிருந்தது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் சர்வதேச விவரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன், ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளரான திரு. கே. கணேசலிங்கம் ஆகியோர் விசேட விமானத்தில் இன்று பலாலி வருவதாக முதலில் ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் விடுதலைப் புலிகள் தரப்பினருடன் தொடர்பு கொள்வதற்குச் சாதகமான பதில் நேற்றிரவுவரை கிடைக்காததால் மேற்படி பிரமுகர்களின் வருகை ரத்துச்செய்யப்படக்கூடும் என நேற்றிரவு பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. [உ-9]

## பலாலியில் கடும் மோதல் இரண்டு சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 4

பலாலியில் நேற்றுக் காலை கடும் மோதல் சம்பவம் இடம்பெற்றது.

மோதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தனர். (உ-9)

## பாதிக்கப்பட்ட தமிழருக்கு நேரில் உதவ பிற நாடுகளுக்கு வேண்டுதல்

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளாலும், பொருளாதாரத் தடையாலும் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ்பேசும் மக்களுக்கு உதவிவழங்க முன்வரும் நாடுகளோ அல்லது அமைப்புகளோ, அவற்றைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழப் பகுதிகளில் ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் நடத்தும் விமான, ஹெலித் தாக்குதல்களாலும், பீரங்கித் தாக்குதல்களாலும் --

மற்றும் சிங்களக் குண்டர்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அப்பாவிமக்களை குண்டுவீசி கொல்வதற்கு கண்டனம்

### யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

தமிழ் பகுதிகளில் விமானக்குண்டு, ஷெல்வீச்சுக்கள் நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வதையிட்டு கவலையடைவதுடன் கண்டனமும் தெரிவிக்கிறோம்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மேற்கண்டவாறு கூறும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் தலைவர் திரு. சோ. கிருஷ்ணராசா தலைமையில் நேற்று நடைபெற்ற சங்கத்தின் விசேட கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட

(4-ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



கோட்டைக்குள்ளை போட்ட பொதியளை யாழ்ப்பாண மக்களுக்குப் போட்ட உணவுப் பொதியள் எண்டு வெளி உலகத்துக்குச் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை......!

## வாழைப்பழம் கிலோ 5 ரூபா

கொக்குவில், ஜூலை 4

அத்தியாவசிய பொருள்களின் விலைகள் ''கிடுகிடு'' என உயர்ந்திருக்கும் இவ்வேளையில் வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சி கண்டுள்ளது.

நேற்று திருநெல்வேலிப் பகுதியில் ஒருகிலோ வாழைப்பழம் 5 ரூபாவுக்கு விற்பனையானது. (ஒ-69)

★ அந்த எண்ணிக்கை குறைந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ் கோட்டையில் காயமுற்ற நிலையிலிருந்த படையினர் 17 பேரை விமானப்படையினர் மீட்டதாக இலங்கை அரசு நேற்றுக் காலையில் அறிவித்தது.

ஆனால் இலங்கை வானொலி நண்பகல் செய்தியில் எண்ணிக்கை குறிப்பிடாமல் சிலர் மீட்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் நேற்றிரவு அரசின் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் விடுக்கப்பட்ட அறிவிப்பில் 7 பேர் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## தமிழகத்துக்கு ஒரே தினத்தில் 324 அகதிகள்

இராமேஸ்வரம், ஜூலை 4

இராமேஸ்வரத்துக்கு சென்ற திங்கட்கிழமை மட்டும் 324 இலங்கைத் தமிழ் அகதிகள் போய்ச் சேர்ந்தனர்.

கடந்த மாதம் சராசரி 40 அல்லது 50 இலங்கைத் தமிழ் அகதிகளே தினமும் இராமேஸ்வரத்துக்குச் சென்றனர் என்று இராமேஸ்வரம் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

## ஆஸ்பத்திரிகள் மீண்டும் இயங்குகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 4

தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிகள் மீண்டும் இயங்கத் தொடங்கியிருக்கின்றன.

இராணுவ நடவடிக்கைகளினால் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-7)

## மன்னார் நோக்கி படைகள்?

கொழும்பு ஜூலை 4

ஆயுதப்படையினர் புத்தளத்திலிருந்து மன்னாரை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தனது அறிக்கையில் தெரிவித்தது.

திருகோணமலை மாவட்டத்தில் சேருநுவர, அல்லை ஆகிய பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது. (அஎ)

## போர் விமானங்கள் போட்ட பொதிகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 4

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் கோட்டைக்கு மேலாகப் பறந்த இரண்டு போர் விமானங்கள் பொதிகளைக் கோட்டைக்குள் போட்டுச் சென்றன.

பிற்பகல் 3.30 மணியளவில் வந்த பிரஸ்தாப விமானங்கள் இரண்டும் சுமார் ஒரு மணித்தியாலம் நகரப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டு, கோட்டை அருகே தாழப் பறந்து பொதிகளை மாறி மாறிப் போட்டன.

இதற்கு முன்னர் ஹெலிக்கொப்டரில் வந்து பொதிகளைப் போட்டு வந்த விமானப் படையினர், நேற்று விமானங்கள் மூலம் உணவுப் பொதிகளைப் போட்டனர்.

இவை நகருக்கு வந்ததும் நேற்றும் குண்டு வீச்சுத் ''திருவிழா'' தான் நடக்கப்போகிறது என்று மக்கள் அஞ்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா, முல்லைத்தீவில் ஆஸ்பத்திரிகள் இயங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

வவுனியா, முல்லைத்தீவு ஆஸ்பத்திரிகள் உடனடியாக மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த டாக்டர்கள், மருத்துவ ஊழியர்கள் மற்றும் ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர்கள் மீண்டும் அந்தந்தப் பகுதிகளுக்குத் திரும்பிச் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இப்பகுதிகளில் பாதிக்கப்பட்டிருக்கும் அகதிகள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளினால் காயமடைந்தோரின் நன்மை கருதி மருத்துவ ஊழியர்கள் தமது கடமைகளை உடனடியாக சீரமைத்துச் செயற்பட முயற்சித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா ஆஸ்பத்திரியை புளியங்குளம் பகுதியில் வைத்து இயங்குவதற்கு முதலில் முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது வவுனியா ஆஸ்பத்திரியை மூட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைப் பகுதியில் காலை நடந்த தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். கோட்டைக்கு அருகே நேற்று அதிகாலை விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று விடிகாலை 4.55 மணி அளவில் வந்த இரு ஹெலிகொப்டர்கள் யாழ் கோட்டைக்கு மேலால் வட்டமிட்டன.

அப்பொழுது அங்கு வெளிச்சத்துடன் வந்த இரண்டு விமானங்கள் கோட்டையைச் சுற்றி வட்டமிட்ட பின்னர் கோட்டைக்கு அருகில் தாக்குதல்களை மேற்கொண்டன. [இ-10]

### சுப நேரம்

04-7-90

புதன்கிழமை ஆனி 20

சுபநேரம்!

04-27— 05-57

இராகுகாலம்

11-57—01-27

# கோட்டையில் காயமடைந்தோர் மீட்கப்பட்டதாக அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

இலங்கை விமானப் படை ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று அதிகாலை யாழ். கோட்டை இராணுவ முகாமுக்குள் இறங்கி காயமடைந்த படையினரை மீட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

இது தொடர்பாக அரசாங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விமானப் படை ஹெலிக்கொப்டர்கள், யாழ்ப்பாணம் கோட்டைக்குள் படுகாயங்களுக்குள்ளான படையினர் சிலரை மீட்பதற்கு மிகத் துணிச்சலோடு மேற்கொண்ட நடவடிக்கை வெற்றியளித்தது.

கடந்த பல நாட்களாக பலத்த காயங்களுடன் கோட்டைக்குள் அவஸ்தைப்பட்ட படை வீரர்கள் இன்று (செவ்வாய்) காலை மீட்கப்பட்டனர்.

விமானப் படை ஹெலிக்கொப்டர்கள் எதிரிகளின் குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் துணிச்சலோடு கோட்டைக்குள் இறங்கி காயமடைந்தவர்களை மீட்டன.

இந்த மீட்புப் பணியின் போது ஒரு ஹெலிக்கொப்டர் மீட்புப் பணியில் ஈடுபட அதற்கு அடுத்த ஹெலிக்கொப்டர் வானில் வட்டமிட்டவாறு பாதுகாப்பு வழங்கியது.

படையினரை மீட்ட இந்த நடவடிக்கைக்கு ''ஒபரேசன் ஈகிள்'' எனப் பெயர் சூட்டப்பட்டிருந்ததாக பி.பி.ஸி. தெரிவித்தது. [உ-எ]

# படையினரை மீட்டு விட்டதாக அரசாங்கம் கூறுவது முழுப்பொய்

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

காயமடைந்த படையினரை யாழ். கோட்டையிலிருந்து வெற்றிகரமாக மீட்டிருப்பதாக அரசு கூறுவது பொய்.

– விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கோட்டையில் காயமடைந்த படையினரை அகற்ற நாம் மறுக்கின்றோம் என்றும் –

தமிழ்பேசும்மக்களைத்தாங்கள் கொல்லவில்லை என்றும்–

அகதிகளாகச் சென்றுள்ள மக்களுக்குத் தாங்கள் நிவாரணம் வழங்குவதாகவும் –

பொய் கூறிவரும் சிங்கள அரசு இன்று [செவ்வாய்க்கிழமை] கோட்டையிலிருந்து காயமடைந்த படையினர் சிலரை வெற்றிகரமாக மீட்டுள்ளதாக மேலும் பொய் கூறியுள்ளது.

கோட்டையின் முற்றுகையை உடைக்கின்றோம் எனக் கூறிக்கொண்டு யாழ் நகரை சிங்கள அரசு குண்டு வீசி அழித்துவருகின்றது.

அதேநேரம் சிங்கள அரசின் இனப்படுகொலை பெருமளவில் கிழக்கில் நடைபெற்று வருவதையும் சர்வதேசமும் அறியும்.

— இப்படி அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (உ-9)

# கோட்டையில் காயமுற்றிருப்போரை அகற்றுவதற்கு ஒத்துழைப்போம்!

## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். கோட்டையில் காயமடைந்த சிங்களப் படையினரை அங்கிருந்து அகற்ற நாம் அனுமதி மறுத்து வருவதாக அரசு கூறி வருகிறது.

நாம் கோட்டையில் காயம் அடைந்தவர்களை அகற்ற எப்போதும் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவே கூறி வந்திருக்கிறோம்.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிவித்திருக்கிறது.

நேற்று முன்னணியின் தலைமைச் செயற்குழு விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த வாரம் இதுபற்றி எம்முடன் பேசிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம், நாம் அவர்களை அங்கிருந்து எடுத்துச் சென்று வைத்தியம் செய்ய மனிதாபிமான அடிப்படையில் ஒத்துழைப்போம் எனக் கூறினோம்.

''படையினருக்கு வைத்தியம்'' என்னும் பெயரில் கோட்டை முகாமுக்கு அரசு ஆயுதங்களைக் கொண்டு வருவதைத் தடுக்கும் முகமாக, செஞ்சிலுவைச் சங்கத்தினர் அவர்களைப் பொறுப்பேற்று தரைப்பாதை வழியாகப் பலாலி முகாமுக்கு எடுத்துச் செல்ல நாம் இணங்கினோம். ஆனால் இதுவரை சிங்கள அரசு அதற்கு இணங்கவில்லை.

சிங்கள அரசுக்கு தமது படையினர் மீதுள்ள அக்கறை எவ்வளவு என்பதை இச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## அவர்கள் ஆஸ்பத்திரியில்!

கொழும்பு, ஜூலை. 4

யாழ். கோட்டை இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட ஆயுதப் படையினரில் ஏழு பேர் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும்-

அவர்களை நேற்று பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன்விஜேரத்தினா, எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜெனரல் சிரில் ரணதுங்கா முப்படைகளின் தளபதிகள், பொலீஸ் மா அதிபர் ஆகியோர் சென்று பார்த்தனர் என்றும்-

இலங்கை வானொலி அறிவித்தது. [உ-எ]

## பதுங்கு குழிகளை வெட்டி யாழ் ஆஸ்பத்திரியை திறப்பதற்கு முயற்சி!

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் மூன்று வார்ட்டுகளை உடனடியாகத் திறந்து மீண்டும் இயங்கச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மூன்று வார்ட்டுகளிலும் அனுமதிக்கப்படும் நோயாளர்கள், அங்கு கடமை புரியும் ஊழியர்கள் மற்றும் டாக்டர்களின் பாதுகாப்புக் கருதி இந்த மூன்று வார்ட்டுகளுக்கும் அருகே சகல வசதிகளை கொண்டதாக பாரிய பதுங்கு குழிகளை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதுங்கு குழிகளை அமைத்து ஆஸ்பத்திரியை மீண்டும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## போராளி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

காரைநகர் கடற்படை முகாமைச் சுற்றியிருக்கும் சென்றியில் இருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை நோக்கி நடத்தப்பட்ட சினைப்பர் தாக்குதலில் ஒரு போராளி மரணமானார். [உ-9]

## கிளிநொச்சி நகரைச்சுற்றி போர்விமானங்கள் குண்டுமாரி!

நேற்று அதிகாலை 5.30 மணி முதல் கிளிநொச்சி நகரைச் சுற்றி போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஏற்பட்ட சேதவிவரங்கள் பற்றி உத்தியோகபூர்வமான தகவல்கள் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (உ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

வெள்ளை நிற போமனெறியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். (13560)

**வாடகைக்கு**

வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குழி யாழ்ப்பாணம். (13561)

## புங்குடுதீவில் புலிகளின் அறிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருள்களை விலைகூட்டி விற்கவேண்டாம் என்றும், பொருள்களைப் பதுக்கவேண்டாம் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் கேட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட வாசகம் எழுதப்பட்ட கரும்பலகைகளை புங்குடுதீவில் அனைத்துப்பகுதிகளிலும், முக்கிய சந்திகளிலும் காணக்கூடியதாக உள்ளது.

அத்தியாவசியப் பொருள்களை பதுக்கி வைப்பதும் விலை அதிகமாக விற்பதும் சமூக விரோதச் செயல்களே என அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-131)

## 13 படையினர் காயம்

புத்தளம்-மன்னார் வீதியில் மறிச்சுக்கட்டி என்னும் இடத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த 13 இலங்கை இராணுவத்தினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (இ-எ)

## 500 பேர் கிழக்கே சென்றனர்

கொழும்பில் நிர்க்கதிக்குள்ளான கிழக்கு மாகாண மக்களில் சுமார் 500 பேர் கடந்த ஞாயிறு அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலோர் பெண்களும் குழந்தைகளும் ஆவர். (இ-எ)

## மனிதாபிமான சேவை செய்ய குழுவாம்!

கொழும்பு, ஜூலை 4

மனிதாபிமான சேவைக்கான ஒன்றிணைப்புக் குழு ஒன்று ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸா தலைமையில் அமைக்கப்பட்டது.

இக்குழுவின் முதலாவது கூட்டம் கடந்த ஞாயிறு ஜனாதிபதிசெயலகத்தில்நடைபெற்றது.

தற்போது நடைபெற்று வரும் சண்டையில் காயமடையும் பொதுமக்களுக்கு வைத்திய உதவி வழங்குவது, அகதிகளைப் பராமரிப்பது ஆகிய பணிகளில் இக்குழு கவனம் செலுத்துமாம். (ஒ-எ)

# படையினருக்கு பயந்து ஓடியோரை ஷெல் குண்டுகள் பதம் பார்த்தன

### அன்புவழிபுரம் அகதிகளுக்கு ஏற்பட்ட பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

இராணுவத்தினர் வருகிறார்கள் என்பதை அறிந்து ஊரில் உள்ள அனைவரும் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஓடினோம். அப்போது வில்கம் விகாரை முகாமில் இருந்த இராணுவத்தினர் கண்மூடித்தனமாகச் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். நான் காலில் படு காயமடைந்தேன். என்னுடன் ஓடிவந்த பலரும் அந்த இடத்திலேயே இறந்தனர். எனக்கு முன்னாலேயே இரண்டு பேர் வயிறு பிளந்த நிலையில் இறந்து கிடந்ததைக் கண்டேன்.

திருகோணமலை அன்புவழிபுரத்தில் இருந்து இராணுவத் தாக்குதலுக்குப் பயந்து ஓடிவந்து ஷெல் தாக்குதலுக்கு இலக்கான என். இராசரத்தினம் (வயது 39) இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி இச்சம்பவம் நடந்தது.

மானிப்பாய் மெமோறியல் ஆஸ்பத்திரி யாழ் வைத்திய சாலை சிகிச்சைப் பிரிவில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவதினம் அன்புவழிபுரத்துக்குள் புகுந்த இராணுவத்தினர் பல இளைஞர்களைச் சுட்டுக்கொன்று அந்த இடத்திலேயே போட்டுக் கொளுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

தனக்கு ஏற்பட்ட அனுபவம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலிலும், இடுப்பிலும் காயமடைந்த என்னையும் மற்றையவர்களையும் அங்கு வந்த இளைஞர்கள் வாகனம் ஒன்றில் தூக்கிப் போட்டுக் கொண்டு நிலாவெளியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சேர்த்தனர்.

அங்கு எங்களுக்கு மருந்து கட்டப்பட்டது.

எனினும் அங்கு இருப்பது பாதுகாப்பில்லை என அறிந்து எங்களை இளைஞர்கள் திரியாய்க்கு கொண்டு போய்விட்டனர்.

திரியாயில் 7 நாட்கள் தங்கி இருந்தோம். காயங்களுக்கு மருந்து கட்ட முடியாத காரணத்தால் காயங்களில்இருந்து புழு வரத் தொடங்கியது.

பின்னர் திரியாயில் இருந்து செம்மலைக்கு வானில் வந்து அங்கிருந்து சங்குபிட்டி வந்து பின்னர் நல்லூருக்கு வந்து சேர்ந்தேன்.

சென். பற்றிக்ஸ் முகாமுக்குச் சென்ற நான் அங்கு எனது மனைவியும் பிள்ளைகளும் இருப்பதைக் கண்டேன்.

எனது காயத்துக்கு சென். பற்றிக்ஸ் முகாமில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினர் மருந்து கட்டி என்னை மானிப்பாயில் சேர்த்தனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ - 10)

## அகதிகள் கஷ்டம்

சுழிபுரம், ஜூலை 4

சுழிபுரம் பகுதியில் அகதிகளாக வந்திருக்கும் மக்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வாங்க முடியாமல் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

சிறு பிள்ளைகளுக்குரிய பால் மா, பிஸ்கெட் சீனி ஆகியன வற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. (இ 28)

## இதுவரை 318 பேர் பலி

கொழும்பு, ஜூலை 4

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இதுவரை பொலிஸார்உட்பட 318 பேர் உயிரிழந்தனர்,

305 படையினர்காயமடைந்தனர்.

இப்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்று முன்தினம் செய்தியாளரிடம் தெரிவித்தார். (உ-எ)

# நெடுந்தீவுக்கு பொருள்களுடன் சென்ற படகு மீது சூடு!

புங்குடுதீவு, ஜூலை 8

கடந்த வெள்ளிக்கிழமை குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நெடுந்தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்த இயந்திரப் படகை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நெடுந்தீவுப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள உணவுப் பொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு, நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச்சென்று கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி படகு நயினாதீவு கடற்படையினரின் சோதனைச் சாவடியை அடைந்து சோதனைகளை முடித்துக்கொண்டு நெடுந்தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

இச்சமயம் கடற்பகுதியில் ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த நயினாதீவு கடற்படையினர் இப்படகை தம்மிடம் வரும்படி சைகை செய்தனர்.

பிரஸ்தாப படகின் ஓட்டிக்கு படையினரின் சைகை விளங்காததால் அவர் நெடுந்தீவை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து படகை நிறுத்தினர்.

சைகை செய்யும்போது தம்மிடம் வந்து போக வேண்டுமென்று எச்சரிக்கை செய்த பின்னரே படகை மேற்கொண்டு செல்ல அனுமதித்தனர்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படகிற்கோ, அதில் இருந்தவர்களுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. [ஒ-131]

## இப்படியும் நடக்கிறதாம்

கொழும்பு, ஜூலை 4

கடந்த 22 ஆம் திகதி கொழும்பில் கைதாகிய இளைஞர்கள் வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த சமயம், மட்டக்களப்பில் இருந்து வந்த சிங்களப் பொலீஸார் ஒருவர் அவர்கள் மீது தாக்குதல் நடாத்தினாராம்.

இரண்டு தமிழ் இளைஞர்கள் காயமடைந்த நிலையில் கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-3)

## திருமலை அகதிகள்

கொழும்புத்துறை, ஜூலை4

திருமலையில் இருந்து கடல் மார்க்கமாகத் தப்பி வந்த ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் வடமராட்சியில் தங்கி உள்ளனர்.

வடமராட்சியில் உள்ள தனியார் வீடுகள் பொது இடங்கள், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், மட்டுவில் சந்திர மவுலீசர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இவர்கள் தங்கி உள்ளனர். (இ-30)

# படையினர் காடுகளில் செல்ல பொதுமக்கள் கேடயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 4

திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி, கும்புறுப்பிட்டிவரை இராணுவத்தினர் மக்களை கேடயமாக வைத்து காடுகளினூடே நடை பவனி மேற்கொண்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

படையினர் வாகனங்களை வீதிகளில் விட்டு விட்டு குழுக்கள் குழுக்களாக காடுகளுக்கு ஊடாக நடைபவனியை மேற்கொள்கிறார்கள். தாம் நிலைகொண்ட கிராமங்களில்உள்ள பொதுமக்களைப் பிடித்து முன்னே கேடயமாகச் செல்லவிட்டு அவர்களுக்குப் பின்னால் படையினர் பயணம் தொடர்வதாக அங்கிருந்து வந்தவர்கள் மூலம் அறியப்படுகிறது.

இதேவேளை நிலாவெளி, கும்புறுப்பிட்டி, குச்சவெளி பகுதிகளில் இருந்த சுமார் நாலாயிரம் மக்கள் வடக்கு நோக்கி வருவதற்காக புடைவைக்கட்டிலும், திரியாய் முகாமிலும் காத்திருப்பதாக அங்கிருந்து வந்தோர் தெரிவித்தனர். (அ-10)

# போரூட், சர்வோதயம் வவுனியாவில் உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 4

வவுனியாவில் இடம் பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவுகளை போரூட், சர்வோதயம் ஆகிய அமைப்புக்கள் வழங்கியுள்ளன.

சர்வோதயம் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு இரு வாரங்களுக்கும் போதுமான உலர் உணவுப் பொதிகளையும், போரூட் அமைப்பு 2 ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு வாரத்துக்குப் போதுமான உலர் உணவுப் பொதிகளையும் வழங்கியுள்ளன.

அதே வேளை கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் 10 லட்சம் ரூபா பெறுமதியான பால் மா, சீனி ஆகியவற்றைக் கடன் அடிப்படையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.

இந்தப் பொருள்களை கடந்த வெள்ளிக்கிழமை அநுராதபுரத்தில் இருந்து எடுத்து வந்த அரச அதிபர் திரு. செ. பத்மநாதன், ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்திருந்தார். (அ-3)

## ஜீ. சி. ஈ பரீட்சை முடிவு

கொழும்பு, ஜூலை 4

வடக்கு–கிழக்கு பகுதிகளில் நிலவும் அமைதியற்ற நிலைமை காரணமாக ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ எ)


## வவுனியாவில் 4 வார உணவு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வவுனியா மாவட்டத்தில் இடம் பெயர்ந்த 6 ஆயிரம் குடும்பங்களுக்கும் 4 வாரத்துக்கான உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப்பட்டுவருகின்றன.

வவுனியா அரச அதிபர் திரு. செ. பத்மநாதனின் கோரிக்கையை அடுத்து ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் இந்த நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது. (இ-3)

## ஓராண்டு நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**சோமசுந்தரம் திருமுருகன்**

மலர்வு: 28 – 02 – 1959

உதிர்வு: 15 – 07 – 1989

அருமைத்திருமகனே அன்புத்திருமுருகா
உருவில் வளர்ந்தெமது உறவில் நிலைத்தவனே
பெருமை மிகு சோதரனே பெறக்கரிய உடன் பிறப்பே
உடைமை உறவெல்லாம் உரமுள்ள தமிழ்மண்ணுக்காய்
திடமான நெஞ்சமுடன் தீரனாய் வலம் வந்தாய்
விடமான நெஞ்சத்தோர் வீழ்த்திட்டார் வஞ்சனையில்
கடமையில் உயர்ந்து நின்றாய்
கண்ணியம் போற்றி நின்றாய்
மடமையகற்றித் தமிழ் மகத்துவமாய் வாழ்வதற்கே
உருவம் அழிந்தாலும் உறவு அழிந்திடுமோ.
உதிரங் கொட்டிவிட்டாய் உண்மைக்கு விலையாக
அதிரும் எம் மனதின் அடியை ஆரறிவார்
விடியும் எனக்காத்திருந்தோம் விடிவைக் காணவில்லை
இனியும் ஆருளரோ இன்பமுடன் எமைக் காக்க
பணிவும் பண்பும் பார்ப்பதுவும் யாரிடமோ
நிறை வாழ்வு காணுமுன்னே
நிறைந்து விட்டாய் நிம்மதியாய்
கறைக்கண்டன் காலடியில் கலங்காது சேர்ந்துவிட்டாய்
கண்ணீரால் அஞ்சலித்துக்
கரங்குவித்துப் போற்றுகிறோம்
எம்முயிரே எங்களுடன் என்றும் இருந்திடுவாய்

எமது அருமை மகன் திருமுருகன் அவர்களின் மரணச்சடங்கிலும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து ஆவன செய்த நண்பர்கள், உறவினர், குறிப்பாக மனோகரன் வெற்றிவேல் நிறுவனத்தினர்க்கும் அஞ்சலி உரை நிகழ்த்தியோர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெற்றோர்,
சகோதரர், உறவினர்.

உடையார் வளவு,
புன்னாலைக்கட்டுவன். [சி-4781]

# நூற்றுக்கணக்கான ஹஜ்யாத்திரிகர் சுரங்கப் பாதையில் நசுங்கி மரணம்

ரியாத், ஜூலை 4

சவூதி அரேபியாவில் புனித மக்கா நகரில் சுரங்கப்பாதை ஒன்றில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக நூற்றுக்கணக்கான ஹஜ்யாத்திரிகர்ள் நசுங்குண்டு உயிரிழந்தனர்.

மதீனாவில் 500 யார் நீள சுரங்கப்பாதை ஊடாக யாத்ரிகர்கள் முண்டியடித்துக் கொண்டு சென்றபோது இந்த நெரிசல் ஏற்பட்டது.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக ஏஜன்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

உயிரிழந்தவர்கள்எந்தெந்த நாட்டவர்கள் என்ற விவரமும் வெளியிடப்படவில்லை.

சவூதி உள்துறை அமைச்சு விசாரணை மேற்கொண்டுள்ளது.

ஹஜ் பெருநாளைக் கொண்டாடுவதற்காக உலகெங்கிலும் இருந்து சுமார் 20 லட்சம் யாத்திரிகர்கள் மக்கா நகரில் திரண்டுள்ளனர். (இ-எ)

## மணவாளக்கோல விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடமராட்சி, வல்லிபுரம் குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்தின் மணவாளக்கோல விழாவும், அபிஷேகமும் இன்று புதன்கிழமை காலை நடைபெறும். (ஒ)

# இமெல்டா மார்க்கோஸ் மீதான வழக்கு தள்ளுபடி

வாஷிங்டன், ஜூலை 4

பிலிப்பீன்ஸின் முன்னாள் ஜனாதிபதியின் மனைவியான இமெல்டா மார்க்கோஸின் மீது தொடரப்பட்ட மோசடி வழக்கை அமெரிக்க நீதிமன்றம் ஒன்று நேற்று தள்ளுபடி செய்தது.

இமெல்டா குற்றவாளி அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பிலிப்பீன்ஸ் அரசுக்குச் சொந்தமான பணத்தை சட்டவிரோதமாக அமெரிக்காவுக்கு கொண்டுவந்தது, அப்பணத்தில் வாஷிங்டனில் சொத்துக்களை வாங்கியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் பெர்டினன்ட் மார்க்கோஸ், இமெல்டா மார்க்கோஸ் ஆகியோர்மீது அமெரிக்க நீதிமன்றத்தில் சுமத்தப்பட்டிருந்தன.

பெர்டினன்ட் மார்க்கோஸ் மரணமாகவே, இமெல்டா மீதான வழக்கு விசாரணை தொடர்ந்து நடந்தது.

இமெல்டாவின் மோசடி நடவடிக்கைகளுக்கு உதவி புரிந்ததாக அரபு கோடீஸ்வரர் அட்னென் கஷோயோகி மீது தொடரப்பட்ட வழக்கையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது அவரும் விடுதலை செய்யப்பட்டார். (இ-எ)

## தீவிர சிகிச்சைப் பிரிவு

கொழும்பு ஜூலை 4

அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக் கண்காணிப்புப் பிரிவுஒன்றுகடந்த ஞாயிறு முதல் திறந்துவைக்கப்பட்டது. (இ-எ)

## பாதிப்புற்ற மக்களுக்கு உதவி

வட்டுக்கோட்டை, ஜூலை4

சங்கானை' பாதிக்கப்பட்ட மக்களுக்கான மாணவர் அமைப்பு' பொது மக்களிடமிருந்து பணம் மற்றும் உடுப்புகள், பொருள்கள் என்பனவற்றைச் சேகரித்துத் திற்றூர் அவை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வருகிறது. (ஒ-161)

## அகதிகளுக்காக ஆடைகள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழக மாணவரிடம் இருந்தும், கல்விசார், கல்விசாரா ஊழியர்களிடம் இருந்தும் அகதிகளுக்காக நிதி சேகரித்து வருகின்றது.

பொதுமக்களிடம் இருந்து ஆடைகள் மட்டுமே சேகரிக்கப்பட்டு வருகிறது. அதற்கு மக்கள் ஆதரவு வழங்குமாறு ஒன்றியம் கேட்டுள்ளது. (ஒ-3,

# மட்டக்களப்பு நகரில் கடைகள் தொடர்ந்து மூடிய நிலையில்

கொழும்பு, ஜூலை 4

மட்டக்களப்பு நகரில் கடைகள் தொடர்ந்து மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

போக்குவரத்துச் சேவைகளும் இல்லை.

மக்கள் கால்நடையாகவும் சைக்கிள்கள் மூலம் நகருக்குச் செல்கின்றனர்

இராணுவத்தினர் நகரின் பல இடங்களில் நிலை கொண்டுள்ளனர். அவர்கள் மக்களின் அடையாளக் கார்ட்டுகளைப் பரிசோதனை செய்கின்றனர்.

கல்லடிப்பாலத்தில் இராணுவத்தினர் பாதுகாப்புக்கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

மாமாங்கக் கொலனி, இருதயபுரம் பகுதிகளில் ஞாயிறு பிற்பகல் 2 மணியில் இருந்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடவே இராணுவத்தினர் [illegible] ஒலிபெருக்கி மூலம் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தனர். (இ - எ)

# லைபீரிய ஜனாதிபதியை மீட்க அமெரிக்கா தயார்

மொன்றோவியா, ஜூலை 4

லைபீரிய ஜனாதிபதி ஜெனரல் சாமுவல்டோ நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு உதவ தயாராக இருப்பதாக அமெரிக்க அரசு நேற்று அறிவித்தது.

விடுதலைப் புரட்சிப் படைகள் தலைநகர் மொன்றோவியாவைச் சுற்றி வளைத்து தங்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளன.

அதனைத் தொடர்ந்து அமெரிக்க அரசின் இந்த அறிவிப்பு வெளியானது.

அரசு வானொலி நிலையக் கட்டடத்தில் இருந்து சில நூறுயார் தொலைவில் கிளர்ச்சிப் படைகள் நிலை கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

தலைநகருக்கும் வெளிநாடுகளுக்கும் இடையேயான டெலெக்ஸ்மற்றும் தொலைத் தொடர்புகளை கிளர்ச்சிப் படைகள் துண்டித்துவிட்டன.

ஜனாதிபதி டோ தனது மாளிகையில் இருந்து வருகின்றார். அந்த மாளிகைக்கு காவலாக ஐந்நூறு துருப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

உபஜனாதிபதிமற்றும் அரசு முக்கியப் பிரமுகர்கள் மொன்றோவியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நேற்று அவசர ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தனர்.

திரு. கிளார்க் ரெய்லர் தலைமையிலான தேசபக்தி விடுதலைப் படைகள் நாட்டின் ஆட்சியைப் பிடிக்க இந்தக் கிளர்ச்சியை ஆறு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்தன.

நெருக்கடியைத் தவிர்க்க தேசிய ஐக்கிய அரசு அமைக்கத்தான் தயார் என்று ஜனாதிபதி டோ இறுதியாக வெளியிட்ட வேண்டுகோளை விடுதலைப் படைத் தலைவர் ரெய்லர்நிராகரித்துவிட்டார். (இ எ)

## இக்கட்டான நிலையில் கொழும்பு தமிழ் வர்த்தகர்

கொழும்பு, ஜூலை 4

கொழும்பில் உள்ள தமிழ்க் கடைகளின் உரிமையாளர்கள் தமது உடமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

புதிதாக பொருள்களைக் [illegible] கொள்வனவு [illegible] நிறுத்தியுள்ள தமிழ் வர்த்தகர்கள் இருக்கும் பொருள்களை விற்று முடிப்பதிலேயே கவனம் செலுத்துகிறார்கள்

பெரும்பாலான வர்த்தகர்கள் தமது கடைகளை மூடி [illegible] தயாராக இருப்ப[illegible] (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவர்களுக்கு உதவுங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் நாளாந்தம் அதிகரிக்கின்றன. நேர காலம் எதுவும் இன்றி விமானங்கள் வந்து குண்டு பொழிகின்றன. யாழ். கோட்டையை அண்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, கோட்டையிலிருந்து தூர வசிப்பவர்களும் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்கின்றனர். விமானத் தாக்குதல் பகுதியைப் படையினர் தினமும் விஸ்தரித்துக் கொண்டு போவதே அதன் காரணம்.

கடந்த வார இறுதியில் எடுக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ஒன்றின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்போது இரண்டு லட்சத்துக்கும் கூடுதலான அகதிகள் உள்ளார்கள். அவர்களில் இருபதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். அகதிகளில் பலரும் தமது உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பலவித சிரமப் போராட்டங்களை நடத்தித் தப்பி வந்த திருகோணமலை மாவட்ட மக்கள்.

இந்த மக்கள் அனைவரும் தமது சொந்தத் தமிழ் மண்ணிலேயே அகதிகளாகிவிட்ட துரதிர்ஷ்டசாலிகள். அதற்காக நாம் அவர்களைப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு எமது சொந்த அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்க முடியாது.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் குறிப்பிட்டதுபோல, தமிழ் அகதிகளுக்கு அரசாங்கம் உதவும் என்று எதிர்பார்க்கக் கூடாது. நொந்துபோன, நிர்க்கதிக்கு ஆளாகிவிட்ட எமது சொந்தச் சகோதரர்களை பராமரித்து உதவ வேண்டியது யாழ்ப்பாண மாவட்டத் தமிழ் மக்களின் தலையாய பணியாகும்.

அகதிகளுக்கு உதவுவதில் ஒருசாரார் தான் பங்கு கொள்ளவேண்டும் அடுத்தவர்கள் பார்வையாளராக இருந்து உதவுபவர்கள் மீது பிழை பிடிப்பவர்களாக இருக்கவேண்டும் என்பதல்ல. மாணவர் முதல் ஆசிரியர்வரை, அரசாங்க ஊழியர் முதல் வர்த்தகர் வரை சகல தரப்பினரும் அகதிகளுக்கு உதவுவதில் பங்கு கொள்ளவேண்டும்.

அகதிகளுக்குத் தேவையான நிவாரண உதவிகளை அரச மற்றும் அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இணைந்து செய்வதற்கு ஏற்பாடாகி உள்ளது. அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் சேவைக்குரிய பகுதிகள் வகுத்து ஒதுக்கப்பட்டுள்ளன.

இது நிவாரண உதவி வேலைகளில் இரட்டிப்புத்தன்மையை நீக்கும். ஒரு பகுதி அகதிகளுக்கு நிவாரண உதவி அதிகமாகவும், மறு பகுதியினருக்குக் குறைவாகவும் கிடைக்கும் சீரற்ற தன்மையைப் போக்கவும் இது உதவும். சில சாரார் முற்றாகப் புறக்கணிக்கப்படும் நிலையையும் போக்கிவிடும்.

அகதிகளுக்குத் தொண்டர் நிறுவனங்களே உதவி செய்ய வேண்டும் என்பதில்லை. பொதுமக்கள் ஒவ்வொருவரும் உதவலாம். பொருளாகவும், நிதியாகவும் மட்டும்தான் உதவிட முடியும் என்பதுமல்ல அகதிமுகாம்களில் சுகாதார மற்றும் பல பணிகளைச் செய்வதற்கு ஆட்கள் தேவைப்படுவார்கள். தொண்டர் நிறுவனங்களின் வேலைகளைச் செய்வதற்கும் ஆட்கள் வேண்டியிருக்கும்.

இப்போது பாடசாலைகளில் வகுப்புக்கள் நடைபெறுவதில்லை. அரசாங்க அலுவலகங்களுக்கு எல்லா ஊழியர்களும் வேலைக்குச் செல்வதில்லை. எனவே ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று செய்யக்கூடிய உதவிகளைச் செய்யலாம். மாணவர்களும் வீடுகளிலும், வீண் கதை பேசுவதிலும் பொழுதைப் போககாமல் அகதி முகாம்களுக்குச் சென்று தொண்டுபுரியலாம்.

ஒவ்வொரு தனிப்பட்டவரும் அகதிகளுக்குத் தொண்டுசெய்வதில் தன்னைப் பங்காளி ஆக்குவது அவசியம்.

# செட்டிகுளம்-நெடுங்கேணி மக்கள் போதிய உணவு இன்றிப் பாதிப்பு

வவுனியா, ஜூலை 4

வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம், நெடுங்கேணி பகுதி மக்களுக்கு கடந்த 14 ஆம் திகதி முதல், உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படாததால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பத்தாயிரம் பேர் பட்டினிநிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 14 ஆம் திகதி வவுனியா நகரத்தில் ஏற்பட்ட சம்பவங்களை அடுத்து செட்டிக்குளம் நெடுங்கேணி ப. நோ. கூ. சங்கங்களுக்கான உணவு விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது.

பின்பு பம்மைமடு, வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு ப.நோ.கூ. சங்கங்களுக்கு உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்ட போதும், மேற்படி இரு ப.நோ.கூ. சங்கங்களுக்கும் உணவு விநியோகத்தை மேற்கொள்ள முடியாது போனது.

செட்டிகுளம் பகுதியில் ஜனசவிய உதவிபெறும் ஐயாயிரம் பேருக்கு இருமாதங்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கத்தேவையான உணவுப்பொருள்கள் அங்கு இல்லை. அதனால் அவர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை.

அதே நேரம் நெடுங்கேணிப் பகுதியைச் சேர்ந்த 3,000 பேருக்கு உணவுமுத்திரைக்கு பொருள்கள் வழங்க முடியாத நிலை இருந்து வருகிறது.

அப்பகுதிக்கு அகதியாக இடம்பெயர்ந்த இரண்டாயிரம் பேருக்கு நிவாரணப் பொருள்களும் வழங்கப்படவில்லை.

அந்த இரு இடங்களில் உள்ள மக்கள் பட்டினியின் விளிம்பில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# ஆவணங்கள் பாதுகாப்பாக எடுக்கப்பட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ் பிரதான வீதியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் காரியாலயத்தில் இருந்த ஆவணங்கள் யாவும் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. வங்கி வாடிக்கையாளர்கள் பீதி அடையத் தேவையில்லை.

தேசிய சேமிப்பு வங்கி யாழ் கிளை முகாமையாளர் திரு. என். சிவபாலகணேசன் இப்படித் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொம்மர் தாக்குதலில் இந்த வங்கிக் கட்டடம் சேதமடைந்திருந்தது தெரிந்ததே.

இந்த வங்கிக்கிளை இயக்கும் இடவிவரம் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# ஹெலியிலிருந்து ரொக்கட் வீச்சு இளம் குடும்பம் தப்பியது

ஹெலியிலிருந்து வீசப்பட்ட ரொக்கட் தாக்குதலின் போது இளம் குடும்பம் ஒன்று மயிரிழையில் தப்பியது.

இச்சம்பவம் நேற்று விடிகாலைப் பொழுதில் யாழ். ஆஸ்பத்திரி வீதி அடைக்கல மாதா கோயிலுக்குச் சமீபமாக இடம்பெற்றது.

சம்பவத்தில் உயிர் தப்பியோர் ஆர். சந்திரகுமார், மகாலஷ்மி சந்திரகுமார், அவர்களது 3 வயது மகன் யோசப் கிறேசியன்.

சம்பவதினம் ஹெலியின் சத்தம் கேட்டு கணவன் - மனைவியும், குழந்தையும் குளியல் அறையில் பதுங்கி இருந்தனர். சிறிது நேரத்தில் ஹெலியில் இருந்து வீசப்பட்ட ரொக்கட் ஒன்று அவர்களின் வீட்டுக்கூரை மீது விழுந்து பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

கூரைப் பகுதியும் மற்றும் பெறுமதிவாய்ந்த உடைமைகளும் சேதம் அடைந்தன. (இ-10)

# பொலீஸ் நிலையத்தை திறக்க முயற்சி

கொழும்பு, ஜூலை 4

மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்தை திறக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

அம்பாறையில் இருந்து 150 பொலீஸார் மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டிருக்கிறது. [இ-எ]

# தலைக்கவசம் பற்றிய புதிய விதிகள்

கொழும்பு, ஜுலை 4

மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்குப் பின்னால் அமர்ந்து செல்பவர்களுக்குமான பாதுகாப்பு தலைக்கவசம் தொடர்பாக புதிய விதிகளை போக்குவரத்து அமைச்சு அறிமுகம் செய்துள்ளது.

இது சம்பந்தமான விதிகள் அமைச்சர் விஜேயபால மென்டிஸால் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. தலைக்கவசம் அணிந்திருப்பவரின் முக அடையாளம் நன்கு தெரிய வேண்டும். அது தலையைச்சுற்றியும் அணியப்பட வேண்டும் அத்துடன் தலைக்கவசம் நாடியில் பட்டியால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்படி புதிய விதிகள் கூறுகின்றன. (இ-எ)

# வவுனியா நிலைமையில் மாற்றம் எதுவும் இல்லை

வவுனியா நகரம் மின்சாரம், நீர் விநியோகம், சுகாதாரம், தொலைபேசி போக்குவரத்து ஆகிய தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொடர்புகளை மீள அமைக்க அதிகாரிகளும் அங்கு இல்லை.

சுகாதார வசதிகள் துண்டிக்கப்பட்டதால் நகரப் பகுதி காடாக காட்சியளிப்பதுடன் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டட இடிபாடுகளும், பாரிய மரங்களும் வீதிகள் தோறும் கிடக்கின்றன.

அத்துடன் இறந்த கால்நடைகளும் வீதிகளில் கிடக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்த எவரும் இல்லை. (இ-3)

# தமிழ் நாட்டில் வெடி விபத்து 18 பேர் உயிரிழந்தனர்

சென்னை, ஜூலை 4

தமிழ் நாடு, உளுந்துள்ப் பேட்டையில் ஏற்பட்ட வெடி விபத்து ஒன்றில் 18 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

இவர்களில் இருவர் தீயணைப்புப்படையினர். இருவர் பெண்கள்.

மூன்று குடிசைகள் தீக்கிரையாகின. குடிசைகளில் பிடித்த தீயை அணைக்க தீயணைப்புப்படையினர் முயன்று கொண்டிருந்த போது, ஒரு குடிசையில் திடீரென்று வெடிச்சத்தம் கேட்டது.

அக்குடிசையினுள் இருந்த ஜெலற்றின் வெடிமருந்துக் குச்சிகளில் தீப்பிடித்ததைத் தொடர்ந்து வெடி விபத்து ஏற்பட்டது.

அனுமதி பெறாமல் ஜெலற்றின் வெடிமருந்துகள் அங்கு வைக்கப்பட்டிருந்தனவாம். (எ)

யாழ். போதனா வைத்தியசாலை

# குளிரூட்டிகளில் உள்ள மருந்து பழுதடைந்துவிடும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டுள்ள பெறுமதி மிக்க மருந்துவகைகள் பழுதடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கான மின் விநியோகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவில் இருந்து தடைப்பட்டதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மானிப்பாய் மெமோறியல் யாழ். வைத்தியசாலைப் பிரிவில் போதியளவு குளிரூட்டிகள் இல்லாததன் காரணமாக தினமும் போதனா வைத்தியசாலையில் இருந்தே முக்கிய மருந்து வகைகள் அங்கு [illegible] செல்லப்படுகின்றன.

மின்விநியோகம் தொடர்ச்சியாகத் தடைப்பட்டிருப்பதால் துணிகள் அவிக்கும் வேலைகளும் ஸ்தம்பிக்கலாம் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-10)

# வவுனியா செயலகத்திலிருந்து உபகரணங்கள் பல கொள்ளை

வவுனியா, ஜூலை. 4

வவுனியா செயலகத்தில் இருந்து பெறுமதியான உபகரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

செயலகத்தில் உள்ள திட்டமிடல், புனர்வாழ்வு அலுவலகம் உடைக்கப்பட்டு அங்கிருந்து தட்டச்சு இயந்திரங்கள், றோனியோ இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம், தொலைபேசி ஆகியன கொள்ளையிடப்பட்டுள்ளன.

அதே நேரம் வவுனியா நகரத்தில் உள்ள 300க்கு மேற்பட்ட கடைகளும் உடைக்கப்பட்டுப் பொருள்கள் கொள்ளையிடப்பட்டன.

பெரும்பான்மையான கடைகள் முன் கதவு உடைக்கப்படாது கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ - 3)

# மார்பு நோய் சிகிச்சை நிலையம் கோப்பாயில்

யாழ்ப்பாணம், ஜூலை 4

மார்பு நோய் சிகிச்சை நிலையம் கோப்பாய் வைத்தியசாலையின் ஒரு பிரிவில் இயங்க உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வட பிராந்திய சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வந்த இந்த நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விமானத் தாக்குதலில் சேதமுற்றது.

மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் இருந்த பொருள்கள் உட்பட அனைத்துத் தளபாடங்களும் தற்போது கோப்பாய் வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுவிட்டன. (இ - 10)

# தாக்குதலுக்கு உள்ளானவர் ஒருவர் இறந்தார் அதன்பின்பே எம்மை விடுவிக்க இணங்கினர்

## கொழும்பில் கைதான யாழ். இளைஞர் ஒருவர் தகவல்

யாழப்பாணம், ஜூலை 4

துறைமுகப் பொலீஸ் நிலையத்தில் நாம் வைக்கப்பட்டிருந்த போது எம்முடன் இருந்த 55 வயது நபர் ஒருவர் திடீரெனமயக்கமடைந்து மரணமானார். முதலில் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட காயம் அவருக்கு இருந்தது. அதன்பின்பே எங்கள் அனைவரையும் விடுவிக்க அவர்கள் இணங்கினர்.

யாழ். நாச்சிமார் கோவில் பகுதியைச் சேர்ந்த நகைத் தொழில் செய்பவரான மகேஸ்வரன் தமது பயங்கர அனுபவத்தை மேற்கண்டவாறு விவரித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

உறவினர் ஒருவரின் திருமணத்தை முன்னிட்டு நானும் எனது தாயாரும், நண்பர்கள் பிரபுராம், ரவி ஆகியோருடன் கொழும்பு சென்றிருந்தோம்.

அங்கே லொஜ் ஒன்றில் தங்கி உறவினரின திருமணத்தை முடித்துக் கொண்டு 13ஆம் திகதி காலை 6 மணி அளவில் ரயில் மூலம் யாழ் நகருக்கு வர திட்டமிட்டிருந்தோம். அதன்படி அதிகாலை எழுந்து புறப்படுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட டிருந்தோம்.

### இராணுவம் வந்தது

அப்போது அதிகாலை 3 45 மணி இருக்கும். நாம் இருந்த லொஜ்ஜின் முன்பாக சில ராணுவ வாகனங்கள் வந்து நின்றன உள்ளே நுழைந்த ராணுவத்தினர் பெண்கள், குழந்தைகள் தவிர்ந்த ஆண்கள் அனைவரையும் பலவந்தமாக ராணுவ டிரக்குகளில் ஏற்றினர். எம்மை பலவந்தமாக இழுத்துச் சென்றபோது எனது தாயார் ராணுவத்தை தடுக்க முற்பட்டார் ஆனால் ராணுவ வீரர் ஒருவர் எனது தாயாரை தள்ளி விட்டு எம்மை தர தரஎன இழுத்துச் சென்றார். எம்மை டிரக்கில் ஏற்றிய போது எனது நண்பன் ரவி காக்காய் வலிப்பு வந்தவன் போல விழுந்து கிடந்து துடித்தான். அப்போது ராணுவத்தினர் அவனை டிரக்கிலிருந்து தள்ளி விழுத்தி விட்டு புறப்பட்டனர்.

இவ்வாறாக கொழும்பின் பல்வேறுபகுதிகளில் இருந்தும் லொஜ்கள், வீடுகளிலிருந்தும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களை கைது செய்து டிரக்குகளில் ஏற்றினர்.

சுமார் அரை மணி நேர பிரயாணத்தின் பின் ஒரு ராணுவ முகாமின் முன் டிரக்குகள் நின்றன.

### கழிவு நீர் வாய்க்கால்

எமது டிரக் முகாமின் வாசலை அண்டி நிறுத்தப்பட்டது. அனைவரையும் கீழே குதிக்கும்படி உத்தரவிடப்பட்டது.

அந்த முகாமின் வாசலை அண்டி கழிவு நீர் வாய்க்கால் ஓடுகிறது அதற்கு அருகே அரை அடி அகலமான திட்டு. அந்த பகுதியிலேயே எம்மைக் குதிக்க உத்தரவிட்டனர்.

எமக்கு கழிவுநீர் வாய்க்கால் பற்றியோ திட்டு பற்றியோ எதுவும் தெரியாது இதனால் எம்மில் சிலர் அதிஷ்டவசமாக திட்டில் விழுந்தனர் பலர் வாய்க்காலில் விழுந்தனர்.

### வளைந்து வளைந்து ஓடினோம்

விழுந்த கையோடு எவரும் தாமதியாது ஓடி. சுமார் 100 யார் தொலைவில் உள்ள ராணுவ முகாமுக்குள் சென்றுவிட வேண்டும் என்று ராணுவத்தினர் உத்தரவிட்டனர்.

அந்த 100 யார் பாதையில் சுமார் 20 ராணுவத்தினர் வழியை அடைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தனர் ஓர் இராணுவ வீரனுடனும் இடிபட கூடாது என்றும் உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில் ராணுவ வீரர்களை விலக்கி வளைந்து வளைந்து ஓடி முகாமை அடைந்தோம்.

நாம் ஓடும்போது ராணுவ வீரர்கள் சிலர் எம்மை காலால் தடக்கி விழுத்தினர். சிலர் தாக்கினர். நாம் கீழே விழும் போது விழுந்து விழுந்து சிரிப்பர். விழுந்தவுடன் எழுந்து ஓடாவிட்டால் எல்லோரும் சேர்ந்து தாக்குவார்கள்.

அனேகமாக எல்லோருமே இவ்வாறு அடிவாங்கினோம். பின்னர் அந்த முகாமின் இரண்டாவது மாடிக்கு எம்மை அழைத்துச் சென்று அங்கே இருத்தினர். ஒரு முகமூடி அணிந்த [illegible]டியை அழைத்து வந்து டோர்ச் வெளிச்சத்தில் எம்மை காட்டினர்.

### தலையாட்டி

பின்னர் வெளிச்சமான அறை ஒன்றுக்கு தலையாட்டியை அழைத்துச் சென்று இருத்திவிட்டு எம்மை ஒவ்வொருவராக வரச் சொல்லி தலையாட்டி முன் நிறுத்தினர்.

தலையாட்டி அடையாளம் காட்டவே 20 பேர் தடுத்து வைக்கப்பட்டனர். அந்த 20 பேரும் மூன்றாவது மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் மூன்றாவது மாடியில் வைத்து அவர்கள் தாக்கப்பட்டிருக்கலாம். பெரும் கூச்சல்கள் அங்கிருந்து கேட்டன.

பின்னர் எம்மை 9 மணி அளவில் விடுவிக்கப் போவதாகச் சொன்னார்கள். எனினும் 9 மணிக்கு மீண்டும் 3 தலையாட்டிகள் கொண்டு வரப்பட்டனர் எம்மை அவர்கள் முன்பும் நிறுத்தினர். அதில் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்.

### சிறுநீர்கழிக்க

எமது பெயர்கள் முகவரி என்பன பதியப்பட்டன. பிற்பகலாகிய நிலையில் எமக்கு தண்ணீர்கூட தரப்படவில்லை. சிலர் சிறுநீர் கழிப்பதற்காக மலசலகூடத்துக்கு இராணுவ அதிகாரியின் அனுமதியுடன் சென்றனர். அங்கு அவர்கள் பலமாகத் தாக்கப்பட்டு இரத்தக் காயங்களுடன் திருப்பி வந்தனர். இதனால் இராணுவத்தினர் சிறுநீர் கழிக்க அனுமதித்தபோதிலும் எவரும் செல்லவில்லை.

பின்னர் மாலை 6 மணி அளவில் முஸ்லிம்கள் அனைவரும் தனியே அழைக்கப்பட்டனர். எம் முன்னாலேயே அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. அவர்களில் தாக்குதலுக்குள்ளானவர்களிடம் மன்னிப்பு கோரப்பட்டது. உடனடியாக அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

பின்பு எம்மில் 15 வயதுக்கு கீழ்பட்டோரும், 55 வயதுக்கு மேல்பட்டோரும் தனியாக அழைக்கப்பட்டனர். எம்மையும் அழைத்து வந்தவிடயம் தொழில் என்பன விசாரிக்கப்பட்டது.

### துறைமுகப் பொலீஸ்

[illegible] பெற்று முயற்சி எடுத்ததில் நாமும், 15 வயதுக்கு உட்பட்டவர்களும், 50 வயதுக்கு மேற்பட்டவர்களும் சேர்ந்து துறைமுகப் பொலீஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டோம்.

அங்கும் எம்மை சிங்கள பொலிஸார் வன்மையாகத் தாக்கியதுடன் பெண் பொலீசார் சிலரின் முன்னால் எம்மை நிறுத்தி கேலி செய்தனர்.

பின்னர் அனைவரும் அறை ஒன்றில் அடைக்கப்பட்டு தூங்க அனுமதிக்கப்பட்டோம். நான் அகோரப் பசி களைப்புக் காரணமாக உறங்கிவிட்டேன். திடீரென ஒருவர் என்னை எழுப்பி ''தம்பி பாண் கொடுக்கிறார்கள் வாங்கிச் சாப்பிடு'' என்றார். நான் எழுந்து ஆவலுடன் சென்றபோது அங்கு பாண் முடிந்துவிட்டது. பசியுடன் மீண்டும்வந்து படுத்துவிட்டேன்.

காலையில் எழுந்ததும் மீண்டும் எமது பெயர், முகவரி என்பன பதியப்பட்டன எம்மை யாராவது வந்து அழைத்துச் சென்றால் விடுதலை செய்வதாக கூறினர். உறவினர் பலரும் வந்து பலரை அழைத்துச் சென்றனர். நாம் எங்கிருக்கிறோம் என்ற தகவல் தெரியாததால் எவரும் எம்மை விடுவிக்க வரவில்லை.

எம்முடன் 37 பேர்வரை உறவினர் வராததால் அங்கேயே இருந்தோம். நேரம் மாலையை நெருங்கிக் கொண்டிருந்தது. அவ்வேளையில் எம்முடன் இருந்தோரில் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகிய 55 வயதான ஒருவர் மரணமானார்.

அதன்பின்னரே தாக்குதலில் காயமடைந்தவர்களும் நோயாளிகளும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர். எமக்கு அவசரமாக உணவு வழங்கப்பட்டது. பின்னர் இரவில் அனைவரும் விடுவிக்கப்பட்டோம் அங்கிருந்து நேராகலொஜ்ஜுக்குச்சென்ற நான் தாயாருடன் எமது உறவினர் வீட்டுக்குச் சென்று தங்கினேன்.

கடந்த 30ஆம் திகதி, யாழ்ப்பாணம் போவது அல்லதுவழியிலேயேசாவது என்ற முடிவுடன் புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன்.

இப்படி அவர் கூறினார். (இ-9)

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மறுவாழ்வு நடவடிக்கை

## பாரதிய ஜனதா அரசிடம் கோரிக்கை

தமிழ்நாட்டுக்கு அதிக எண்ணிக்கையில் வரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வுக்காகஇந்தியமத்திய மாநில அரசுகள் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாரதி ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு பிரிவு மேற்கண்டவாறு கோரியுள்ளது.

கட்சியின் துணைத்தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி இதனை நேற்று திருச்சியில் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

இலங்கை நிலைமை மோசமடைவதால் தமிழ்நாட்டுக்கு இலங்கைத் தமிழ் அகதிகள் அதிக எண்ணிக்கையில் வரும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார். (இ-எ)

# இளைஞர்கள் எங்கே?

வவுனியாவில் நிலைமை மோசமடைந்ததை அடுத்து அங்கிருந்துவெயேறி ஓமந்தையில் தஞ்சமடைந்த சகோதரர்களான இரண்டு இளைஞர்களுக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

அவர்கள் இருவரும் ஓமந்தையிலிருந்து வவுனியா சென்றதாகச் சொல்லப்பட்டது.

காணாமற்போன அந்த இரு சகோதரர்களும் ந. யோகராஜா, ந. இலங்கராஜா (இளங்கோ) ஆகியோர்எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# அகதிகளுக்கு மேலும் 3 முகாம்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

திருகோணமலையில் இருந்து அகதிகள் வருகை அதிகரித்துள்ளதை அடுத்து மேலும் மூன்று முகாம்கள் முல்லைத்தீவில் அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே அங்கு இயங்கி வரும் 18 முகாம்களுடன் உடையார்கட்டு. விஸ்வமடு, வல்லிபுரம் ஆகிய இடங்களில் நேற்று முகாம்கள் திறக்கப்பட்டன.

இந்த முகாம்களில் 230 குடும்பங்கள் தங்கியுள்ளன. (இ-3)

# திருச்சி பொலீஸ் நிலையத்தில் 710 இலங்கையர்கள் பதிவு

திருச்சி பொலீஸ் நிலையத்தில் 600 இலங்கைத் தமிழர்கள் உரிய ஆவணங்களுடன் தங்கள் பெயர் விவரங்களை நேற்றுவரை பதிவுசெய்தனர்.

உரிய ஆவணங்களில்லாத 110 இலங்கைத் தமிழரும் தங்கள் பெயர் விபரங்களைப் பதிவுசெய்திருக்கின்றனர்

இலங்கைத் தமிழருக்கு வீடுகளை வாடகைக்குக் கொடுத்துள்ள 125 வீட்டு உரிமையாளர்களும் குடியிருக்கும் இலங்கைத் தமிழர் பற்றிய விவரங்களை திருச்சி பொலீஸ் நிலையத்தில் பதிவுசெய்தனர்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் நாட்டில் உரிய ஆவணங்களின்றி வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் தங்கள் விபரங்களை பொலீஸ் நிலையங்களில் பதிவுசெய்து கொள்ள தமிழக அரசு 7 நாள் கால அவகாசம் வழங்கியது தெரிந்ததே. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள்,
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
பட அல்பங்கள், படச்சுருள்கள்
இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,

# உதயன்

04 - 7 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
★ விநியோகம் ஒரு வாரம் [7 Days]
★ விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## 2 லட்சத்துக்கு மேற்பட்ட அகதிகள் யாழ்மாவட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். மாவட்டத்தில் 42 ஆயிரத்து 832 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 14 ஆயிரத்து 660பேர் அகதிகளாகியுள்ளனர்.

செயலக கணக்கெடுப்பின்படி தினமும் இரண்டாயிரத்தில் இருந்து மூவாயிரம் அகதிகள் வரை அதிகரிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்சமயம் திருகோணமலையில் இருந்தே அகதிகள் அதிக அளவில் வந்துகொண்டிருக்கின்றனர்.

அதேவேளை யாழ். மாவட்டத்தில் 340 அகதி முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன என்றும் செயலக அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## கொக்குவில் ஹெலி தாக்குதல்:
## பலியானோர் எண்ணிக்கை எட்டாக உயர்ந்தது

கடந்த 26ஆம் திகதி கொக்குவிலில் இடம்பெற்ற ஹெலி ஷெல் தாக்குதலில் காயமடைந்த மற்றொருவரும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மரணமானார்.

இவருடன் சேர்த்து இச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் மரணமானவர் உதயகுமார் அலெக்ஸாண்டர் என்னும் 12 வயதுடைய சிறுவன் ஆவார்.

இவரது பூதவுடலும் ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்ட எழுவரின் புதைகுழிக்கு அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் ஒரு குடும்பஸ்தரும் — இரு குடும்பங்களைச் சேர்ந்த உறவினர்களான ஏழு பிள்ளைகளும் உயிரிழந்து விட்டனர் என்பது தெரிந்ததே.

மேலும் காயமடைந்த நால்வர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-69)

## யாழ். நகர் குடிதண்ணீர் விநியோகம் முற்றாகத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை4

'யாழ் நகருக்கான குடிதண்ணீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது. மாநகர ஊழியர்கள் முயன்றாலும் தொடர் தாக்குதல்களினால் வேலைசெய்ய முடியாதுள்ளது.'

மேற்கண்டவாறு யாழ் மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தவெள்ளியன்று நடைபெற்ற விமானத் தாக்குதலால் ஏற்பட்ட பாரியசேதங்களால் யாழ். நகர் நீர்விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இந்தத் திருத்த வேலைகளை மாநகரசபை ஊழியர்கள் மேற்கொண்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக அப்பகுதியில் இடம்பெறும் தாக்குதல்களினால் வேலைகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கிறது. ஆனால் தொடர்ந்து முயற்சிக்கிறோம் என்றார் அவர். [இ-3]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ப. சுவர்ணா

திருமதி பன்னீர்செல்வம் சுவர்ணா காலமானார்.

இவர் செ. பன்னீர்செல்வம் (சவூதி) அவர்களின் அன்பு மனைவியும், இணுவில் கிழக்கைச் சேர்ந்த மகாலிங்கம் - கணேசமணியின் மகளும், தட்டா தெருவைச் சேர்ந்த செல்வரத்தினம் சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும், நாகேஸ்வரி (கொழும்பு), நாகேந்திரம் (மில்க்வைற்), பூபாலசிங்கம், சந்திரசேகரம் (சவூதி), புஸ்பராணி, சோதிமலர், சாந்தரூபி ஆகியோரின் சகோதரியும், சண்முகலிங்கம், யமுனாதேவி, கிருபாமூர்த்தி (சவூதி), றொய்ஸ் (சவூதி), சிவச்செல்வி ஆகியோரின் மைத்துனியும், செந்திலநாதன், சுஜித்திரா, சிவசக்தி, பவானி, கிருஷ்ணகுமார், அருந்ததி, நிஷானி ஆகியோரின் சித்தியும், சங்கிதா, சசிகரன், சயந்தன், சத்தியமீரா, சந்துரு ஆகியோரின் அத்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 04-07-1990 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் பூவோடை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. பூபாலசிங்கம்

(13563)

### திரு. பரநிருபசிங்கம் இரட்ணராஜசிங்கம்

சரவணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திருவாளர் பரநிருபசிங்கம் [சிங்கம் ஓவசியர்] பாக்கியத்தின் அன்புப் புதல்வன் இரட்ணராஜசிங்கம் 25-06-1990 அன்று அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற இராஜசிங்கம் [Hatton], சிவபோகம் [Bogawanthalawa], சிவராஜசிங்கம், ஜெகதீஸ்வரி, அருள்ராஜசிங்கம் [Umbichy Ltd. Colombo], விஜயராஜசிங்கம் [London], சறோஜினிதேவி [Germany], மணிமேகலை வரதராஜசிங்கம் (விண்ணன்) [உரிமையாளர், ஈஸ்வர அம்பாள் & Co., ஸ்ரான்லி வீதி - யாழ். ஈஸ்வரபகவான் & கொம்பனி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்], தர்மகுலசிங்கம் [London] ஆகியோரின் அன்புச் சகோதரனும், சறோஜினிதேவி [Hatton], V. E. A. கனகசிவம் [Bogawanthalawa], மகேஸ்வரி, அமிர்தலிங்கம் [National Housing Development Authority, Jaffna], வாசுகி [Colombo], ஜெகசிவாமணி [London], லோகேஸ்வரன் [Germany] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இவ்வறிவித்தலை உரிய நேரத்தில் அறிவிக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

தகவல்:
திருமதி பரநிருபசிங்கம் பாக்கியம்

சரவணை மேற்கு,
வேலணை.

[13492]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அகதி முகாம்களில் பணிகளை இணைந்து நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு — கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள அகதிகளுக்கான நிவாரணப் பணிகளை, அரசாங்கத் திணைக்களங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட ஏற்பாடாகி உள்ளது.

ஒவ்வொரு அகதி முகாமையும் நிர்வகிக்க அமைக்கப்படும் நிர்வாகக் குழுவில் அந்தந்தப் பகுதிச் சிற்றூர் அவைத் தலைவர், செயலாளர், கிராமசேவையாளர், சுகாதாரப் பரிசோதகர்கள், சனசமூக நிலையத் தலைவர், சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர், இக்குழுவே சம்பந்தப்பட்ட முகாமின் சேவைக்கும் பொறுப்பாயிருக்கும். சேவை நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் நிவாரணங்களை இக்குழுவே பொறுப்பேற்று முகாமில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

கடந்த வார இறுதியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடந்த கூட்டம் ஒன்றில் இவற்றுக்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் எந்தெந்தப் பகுதிகளில் நிவாரண வேலைகளைச் செய்வதெனவும் அங்கு குறித்து ஒதுக்கப்பட்டது.

அதன் விவரம் வருமாறு:-

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை, மானிப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் உள்ள அகதிமுகாம்களின் நலன்களை —

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், சர்வோதயம், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆகியன கவனிக்கும்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களின் நலன்களை—

றெட்பானா, குழந்தை பாதுகாப்பு நிதியம், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983, மனிதவள அபிவிருத்தி நிலையம், அறவழி போராட்டக் குழு ஆகிய நிறுவனங்கள் கவனிக்கும்.

காரைநகர், வட்டுக்கோட்டை, சங்கானை, தீவுப் பகுதி ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களின் நலன்களை—

யாழ் செஞ்சிலுவைச் சங்கம், போறூட் யாழ். மேற்கு, சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு ஆகியன கவனிக்கும்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள அகதி முகாம்களின் நலன்களை—

போறூட் (யாழ். கிழக்கு) நிறுவனம் கவனிக்கும்.

கொடிகாமம், பளை, வடமராட்சி கிழக்கின் ஒரு பகுதி ஆகிய பகுதிகளில்உள்ள அகதி முகாம்களின் நலன்களை—

சர்வோதயம், அகதிகள் புனர்வாழ்வு கழகம், வடக்கு-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் ஆகியன கவனிக்கும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, கத்தோலிக்க தேவாலயங்களில் உள்ள முகாம்களின் நலன்களை—

மனிதவள அபிவிருத்தி நிலையம் (தறியூடேக்) கவனிக்கும்.

பொதுவாக,சுகாதார மருத்துவச் சேவைகளில் எல்லாப் பகுதிகளுக்கும் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும். மனிதவள அபிவிருத்தி நிலையம் கூடுமானவரை உதவும்.

லயன்ஸ் சழகமும், றோட்டறிக் கழகமும் தத்தமது பகுதிகளில் தமது வசதிக்கேற்ப சேவையாற்றும். அதேபோல் பரியோவான் முதலுதவிப் படையினரும் தேவைக்கேற்ப இணைந்து செயற்படுவர். (அ)

## பாடசாலைகள் நிலை குறித்து விவரம் சேகரிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் நிலைமை குறித்து யாழ் கல்வி அலுவலகம் விவரம் சேகரிக்க ஆரம்பித்துள்ளது.

இதுசம்பந்தமாக சுற்று நிருபம் ஆறு கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

வன்செயலால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள், வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகள், அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகள் ஆகியவற்றின் விவரங்களே கோரப்பட்டுள்ளன. (இ-3)

## பத்மநாபா குழுவினர் கொலை:
## 3 ஈழத் தமிழ் இளைஞர்கள் மைலாப்பூரில் கைது!

சென்னை, ஜூலை 4

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சென்னை மைலாப்பூரில் மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்களை பொலீஸார் கைது செய்தனர், என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலீஸாருக்குக் கிடைத்த துப்பு ஒன்றைத் தொடர்ந்து, இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## வவுனியா, முல்லைத்தீவில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடாது அங்கேயே வைத்து அதனை இயக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

வவுனியா ஆஸ்பத்திரியில் தற்போது மூன்று மாதங்களுக்கு தேவையான மருந்துப் பொருள்கள் கைவசம் இருப்பதாகவும் —

அவற்றைப் பாவனைக்கு எடுப்பதற்காக உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர், முல்லைத்தீவு சுகாதார சேவைப் பணிப்பாளர், மேற்படி இரு மாவட்டங்களையும் சேர்ந்த மாவட்ட வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆகியோர் மீண்டும் தத்தம் இடங்களுக்கு பணிபுரியச் சென்றிருக்கிறார்கள்.

இதேவேளை —

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஏனைய ஆஸ்பத்திரி ஊழியர்கள் மற்றும் டாக்டர்கள் ஆகியோரும் தமது கடமைக்கு திரும்பவும் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-9-3)

## அப்பாவி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்கள் வருமாறு:-

★ விமானக்குண்டு, ஷெல் தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள். அத்துடன் உடைமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி பொருளாதாரத் தடையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

★ இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் வகையில் சகல ஆசிரியர்களும் தமது சம்பளத்தில் ஆகக் குறைந்தது 5 சதவீதத்தை வழங்க வேண்டும். (ஒ-3)

## பயிர்ச்செய்கை குறித்து விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்கு, கிழக்கில் தற்போதுள்ள சூழ்நிலையில் மேற்கொள்ளப்படவுள்ள உணவு உற்பத்தி பயிர்செய்கை சம்பந்தமான கூட்டத் தொடர் ஒன்று நாளைவியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி விவசாய திணைக்களத்தின் மாவட்ட விவசாய பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் விவசாய கமநல சேவைகள் திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ள ஏற்பாடாகி உள்ளது. (ஒ)

## விவசாயிகளை நோக்கியும் ஹெலித் தாக்கு

பருத்தித்துறை, ஜூலை 4

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அடிக்கடி ஹெலிக்கொப்டர் பறந்து நோட்டம் விட்டு வருகிறது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் நாகர் கோவில் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளை நோக்கி ஹெலிக்கொப்டர் வேட்டுகளைத் தீர்த்தது.

எனினும் எவரும் காயம் அடையவில்லை. (ஒ-118)

## அகதிகள்

மட்டக்களப்பில் அகதிகளாக இருந்தவர்களை ஏற்றிக்கொண்டு [illegible] கடந்த திங்கட்கிழமை காலை கொழும்பை நோக்கி [illegible] பட்டன. (இ-எ)

## பாதிக்கப்பட்ட தமிழருக்கு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும், சிறிலங்கா இராணுவத்தினரும் கூட்டாகச் சேர்ந்து, தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளுக்குள் புகுந்து மேற்கொண்ட தாக்குதல்களாலும்—

இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்பேசும் மக்கள் கொல்லப்பட்டதுடன், ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் சொத்துக்களை இழந்தும், காயத்துக்குள்ளாகியும், உண்ண உணவோ இருக்க இடமோ, மருத்துவ சிகிச்சையோ இல்லாமல் அவதியுற்றுக்கொண்டிருக்கின்றனர்.

தமிழீழப் பகுதியில் இதுவரை எதுவித பாதிப்புக்குள்ளாகாதிருக்கும் ஏனைய தமிழ்பேசும் மக்கள் கூட கடும் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகவும், உணவு மருந்து மற்றும் நிவாரணப் பொருள்களை அனுப்பி வருவதாகவும் [illegible] தம் தொடங்கிய பின்னர் மருந்து, எரிபொருள்கள் உட்பட எந்தப் பொருள்களையும் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்காதது மட்டுமல்ல, தனியார்கள்கூட எந்தப் பொருட்களையும் எடுத்து வர விடாது தடுத்தும் வருகிறது.

தாக்குதல்களினாலும், பட்டினியினாலும், மருத்துவ வசதியின்மையினாலும் தினம் தினம் செத்து மடிந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகளைக் கூடச் செய்யாதது மட்டுமின்றி, செய்ய விடாது தடுத்தும் வருகிறது சிறீலங்கா அரசு.

உலக நாடுகளோ, மனித நல அமைப்புக்களோ, சுகாதார நிறுவனங்களோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு என உதவிகளை சிறீலங்கா அரசினூடாக வழங்கினால் அந்த உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கப்போவதில்லை. மக்களைப் பாதிப்புக் குட்படுத்திவரும் சக்திகளுக்கே அந்த உதவிகள் போய்ச்சேர்ந்துவிடும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## "தாயக மீட்பு நிதி" நேற்று அறிமுக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 4

தமிழீழ விடுதலைப் புலிகள் சேகரிக்கும் "தாயக மீட்பு நிதி"க்கான கடன் பத்திரத்தை அறிமுகப்படுத்தும் வைபவம் நேற்று கோப்பாய், நல்லூர், மானிப்பாய், உடுவில் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றன.

இந்நிகழ்ச்சியில் மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றியதாகவும் —

பலர் தாங்களாகவே முன்வந்து பத்திரங்களைப் பூர்த்திசெய்து, கணிசமான தங்கத்தை கடனாகக் கொடுத்து தாயக மீட்பு நிதிக்கான திட்டத்தில் பங்காளிகளாகச் சேர்ந்து கொண்டனர் என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்னும் ஒரு மாத காலத்துக்கு மக்களின் பங்களிப்பைக் கேட்டு விடுதலைப் புலிகளின் தலைவர்கள் ஒவ்வொரு பகுதிகளுக்கும் வருகை தருவர் என்றும் —

சிற்றூர் அவையினர் குறிப்பிடும் இடத்தில் மக்களைச் சந்திக்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதேசப் பொறுப்பாளர்கள் வரும்போது அழைக்கப்பட்ட அப்பகுதி மக்கள் தவறாது சமுகமளித்து ஒத்துழைக்கும்படியும்—

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுள்ளனர். (உ)

## தம்பலகமம் பகுதியில் கடும் சண்டை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 4

திருகோணமலைமாவட்டம் தம்பலகமத்தில் நேற்று முன்தினம் முதல் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவப் படைகளுக்கும் இடையில் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்று மாலைவரை தொடர்ந்து சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. (உ-9)

## முல்லைத்தீவு செயலகம் மீண்டும் இயங்குகிறது

முல்லைத்தீவு செயலகம் கடந்த வார இறுதி முதல் மீண்டும் இயங்கத் தொடங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செயலக ஊழியர்களில் கணிசமானோர் வேலைக்குச் சமுகம் கொடுத்திருப்பதாகவும்—

அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் செயலகத்துக்கு சமுகம் தந்து தமது கடமைகளைச் செய்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கிளிநொச்சி செயலக கட்டடத்தின் ஒரு பகுதி இராணுவ நடவடிக்கைகளினால் சேதம் அடைந்திருப்பதால் செயலகத்தை மீண்டும் முற்றாக இயங்கச் செய்வதில் சிக்கல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## மன்னாரில்
## உணவு விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

மன்னார் மாவட்டத்தில் நகரத்துக்கும் ஏனைய 4 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் உணவு விநியோகம் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் நகரத்துக்குச் செல்லும் தாம்போதி கடந்த வாரம் தகர்க்கப்பட்டதை அடுத்து அந்த மாவட்டத்தில் உள்ள நானாட்டான், சிலாபத்துறை, அடம்பன், மடு ஆகிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் நகரத்துக்கும் இடையேயான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவுகளில் வாழும் மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் நகரத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படாமையால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## போர் விமான---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

ஆனால் விமானங்கள் தாழப்பறந்து மேலெழுந்து சென்றபோது குண்டுச் சத்தங்கள் கேட்காததைத் தொடர்ந்து அவை உணவுப் பொதிகளையேபோடுகின்றன என்று ஊகித்துக் கொண்டனர்.

ஒரு விமானத்தில் இருந்தவர் அடுத்த விமானத்தில் இருந்தவரிடம் "ஐந்து பொதிகள் போட்டுவிட்டேன். போதுமா? என்று கேட்டார்.

விமானிகளில் ஒருவர் போட்ட பொதிகளில் ஒன்று தண்ணீருக்குள் விழுந்து விட்டதாகவும் அவர்களின் உரையாடலில் இருந்து அறிய முடிந்தது. கோட்டைக்குள் இருந்த அகழியை அல்லது பண்ணைக் கடலைத் தான் அவர்கள் அவ்வாறு குறிப்பிட்டிருக்க வேண்டும்.

அடுத்த விமானி ஏழு தடவைகள் பொதிகளைப் போட்டிருந்தார். [அ]

## மக்கள்வங்கி வேலை நேரம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

மக்கள் வங்கிகளின் வேலை நேரம் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு விரைவில் அறிவிக்கப்படும் என்று மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை மக்கள்வங்கி யாழ். பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைதீவு ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றிய ஊழியர்கள் கடமைக்குத் திரும்பமுடியாது இருந்தால் உடனடியாக ஸ்ரான்லி வீதி மக்கள்வங்கிக் கிளையில் பிரதேச முகாமையாளரை சந்திக்குமாறும்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [இ-10)

## பதுங்கு குழி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கச் செய்யும் நடவடிக்கைகளில் யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்களும், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளும் முனைப்போடு செயற்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரசவ வார்ட், விபத்தில் காயமுற்றோரை அனுமதிக்கும் வார்ட் உட்பட மூன்று வார்ட்டுகள் உடனடியாகத் திறக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (உ-9)

## தேவை

சலி [CHALY] மோட்டார் சைக்கிள்

சலி [Chaly] மோட்டார் சைக்கிள்கள் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் உதயன் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org